ஆதிதிராவிடர்களுக்கான மனைப்பிரிவு – கோவை மாவட்டம் – பொள்ளாச்சி வட்டம் – மாச்சநாயக்கன்பாளையம் கிராமம் – க.ச. எண்.69/1–ல் 3.21 ஏக்கர் பரப்பில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு – பொது உபயோகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை குடியிருப்பு மனைகளாக அமைக்க திருத்திய மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் வழங்கியது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.2) துறை

அரசாணை (நிலை) எண்.2 நாள்: 8.1.2008

படிக்கப்பட்டது:

நகர் ஊரமைப்பு இயக்குநர் கடித எண்.19974/2006/எல்எ2 நாள் 17.10.06.

-----

படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், மாச்சநாயக்கன்பாளையம் கிராமம் புல எண்.269/பி1–ல் 3.21 ஏக்கர் நிலத்தை ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைக்காக கையகப்படுத்தப்பட்டதில், பொது உபயோகத்திற்காக விடப்பட்ட இடத்தில் குடிசை போட்டு வசித்து வரும் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ஏதுவாக மனைப்பிரிவு அங்கீகரிக்க 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 6(1) மற்றும் 18(1) ஆகியவைகளைத் தளர்த்த வேண்டி நகர் ஊரமைப்பு இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், மாச்சநாயக்கன் பாளையம் கிராமம் புல எண்.269/பி1–ல் 3.21 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் 59 மனைகள் மற்றும் 42 சென்ட் இடம் பொது உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்து ஆதிதிராவிடர் நல மனைப்பிரிவு வரைபடம் LP/R (CN) No.348/79 என்ற எண்ணில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு இடத்தில் சாலைகள் அமைக்கப்பட்டு மனைகள் உரிய நபர்களுக்கு வழங்கி குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மனைப்பிரிவு சாலைகள் கான்கிரீட் சாலைகளாக அமைத்து ஊராட்சி பராமரிப்பில் உள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள பொது உபயோகப் பகுதி 42 சென்ட் பரப்பானது மொத்தப் பரப்பில் 13.08% ஆகும். இதில் தற்போது வடபுறம் 36 மீ x 10 மீ அளவுள்ள பரப்பில் மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அவ்விடத்தின் தென்மேற்கு பகுதியில் 10 x 11 மீ அளவில் உள்ள இடத்தில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள இடத்தில் 29' x 30' என்ற அளவில் 10 நபர்கள் குடிசை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

3. பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில், குடிசை அமைத்து, 15 ஆண்டு காலம் வாழ்ந்து வரும் ஆதிதிராவிட மக்களுக்கு, வீட்டுமனைப் பட்டா வழங்க தாத்தூர் ஊராட்சித் தலைவர் மற்றும் பொள்ளாச்சி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) ஆகியோர் பரிந்துரைத்துள்ளனர். மேலும், மேற்கண்ட பொது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட மனைப்பிரிவில் குடிசை அமைத்துள்ளவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள் மற்றும் ஏழை மக்கள் ஆவார்கள் என்றும், வீட்டுமனைப் பட்டா வழங்குவது அவசியமானது என்பதால் இதனை சிறப்பினமாகக் கருதி திருத்திய மேற்படி மனை வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கும்படி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்கூறிய ஆதிதிராவிடர்களுக்குரிய மனைப்பிரிவின் வரைபடம், மேற்கூறிய மனைப்பிரிவிலிருந்து ஒதுக்கப்பட்ட பொது இடத்தின் வரைபடம், மற்றும் திருத்திய மனைப்பிரிவின் வரைப்படம் ஆகியவற்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

4. மேலும், மேற்கண்டவாறு பொது ஒதுக்கீட்டிலிருந்து மனைப்பிரிவாக மாற்றினால் கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகள், 1997–ல் ஏற்படும் பாதிப்பினை நகர் ஊரமைப்பு இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

(1) ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் தற்பொழுது 5082 சதுர அடி (3.63 %) மட்டும் பொது உபயோகத்திற்கு அமைகிறது. தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகள் 1997–ன் விதி எண்.18(1)–ன்படி பொது உபயோகத்திற்கென 10% சதவீதம் விதி பாதிப்புள்ளது.

(2) மனையின் அளவுகள் 29’ x 30’ என உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி கட்டிட விதிகள், 1997–ன் விதி எண்.6(1)–ன்படி குறைந்த பட்ச மனையின் அளவு 9 மீ x 15 மீ (30’ x 50’) இருத்தல் வேண்டும். ஆதலால் விதி பாதிக்கிறது. அகலம் 30’ உள்ளது நீளம் 29’ உள்ளது. குறைவு 21’. ஆதலால் 42 சதவீதம் விதி பாதிப்புள்ளது.

மேற்கண்ட மனைப்பிரிவானது அரசின் ஆதிதிராவிடர் காலனிக்காக வீட்டுமனைப் பட்டா வழங்குவது சம்பந்தமாக உள்ளதால் இதற்கு சிறப்பு இனமாக கருதி பாதிக்கும் 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 6(1) மற்றும் 18(1) ஆகியவைகளைத் தளர்த்தும் பொருட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

5. 1997 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.255–ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகளில் விதி 6 (1)–ல் குறைந்தபட்சம் 9 மீட்டர் அகலமும் 15 மீட்டர் நீளமும் கொண்ட மனையில் கட்டடம் எழுப்பப்பட வேண்டும் எனவும், விதி 18(1)–ல் பூங்கா, விளையாட்டு மைதானம் அல்லது மனமகிழ்வு இடம் போன்ற பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மனை வரைபடத்தின் மொத்தப் பரப்பளவில் 10 விழுக்காட்டிற்கு குறையாததொரு திறந்தவெளி இருக்க வேண்டும் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்நிகழ்வில் மனையின் அளவுகள் 29’ x 30’ (8.8 மீட்டர் x 9.1 மீட்டர்) என உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் தற்பொழுது 5082 சதுர அடி (3.63 %) மட்டும் பொது உபயோகத்திற்கான இடம் உள்ளது. எனவே, மனைப்பிரிவு அங்கீகரிக்க, 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகளில் விதி 6 (1) மற்றும் 18(1) ஆகிய விதிகளைத் தளர்வு செய்ய வேண்டியுள்ளது.

6. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், மாச்சநாயக்கன்பாளையம் கிராமம் புல எண்.269/பி1–ல் 3.21 ஏக்கர் நிலத்தை ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைக்காக கையகப்படுத்தப்பட்டு ஆதிதிராவிடர் நல மனைப்பிரிவு வரைபடம் LP/R (CN) No.348/79 என்ற எண்ணில் மனைப்பிரிவாக அங்கீகரிக்கப்பட்ட இடத்தில், பொது உபயோகத்திற்காக விடப்பட்ட இடத்தில் குடிசை போட்டு வசித்து வரும் வீடு இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ஏதுவாக மேற்கண்ட வீட்டுமனைப் பிரிவில் அங்கீகாரம் வழங்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநரின் பரிந்துரைகளை ஏற்று, இதனை ஒரு சிறப்பினமாகக் கருதி, 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டிட விதிகளில் விதி 6 (1) மற்றும் 18(1) ஆகிய விதிகளை தளர்வு செய்தும், மனைப்பிரிவு பொது இடங்களை ஆக்ரமிப்பு இன்றி பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டு மேற்கண்ட இவ்விதித் தளர்வை முன்னுதாரணமாக கொள்ளக் கூடாது என்றும் அரசு ஆணையிடுகிறது. மேலும், அரிஜன் என்ற சொல் உபயோகப்படுத்தக்கூடாது எனவும் அதற்குப் பதிலாக ஆதிதிராவிடர் என்று கூற வேண்டும் என ஏற்கனவே அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட மனைப்பிரிவின் வரைபடத்தில் அரிஜன் நல மனைப்பிரிவு என குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது. எனவே அவ்வரைபடத்தில் ஆதிதிராவிடர் நல மனைப்பிரிவு என மாற்றி அமைக்க வேண்டும் எனவும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் ஆகியவர்களுக்கு அறிவுரைகள் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசுச் செயலாளர்.